S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE புதன் ஜனவரி 28 * 2026 * மலர் -1 * இதழ்-239* VOL-1 * ISSUE-239 விலை ரூ.3 * பக்கம் -4

# சென்னையில் உலக மகளிர் உச்சி மாநாடு!

## ★ முதலமைச்சர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்;
## ★ உலக வங்கி பிரதிநிதிகள், பெண் தொழிலதிபர்கள் பங்கேற்பு!!






சென்னை, ஜன.28–

சென்னையில் உலக மகளிர் உச்சி மாநாடு நடக்கிறது. இதை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதில் 800க்கும் மேலான பிரதிநிதிகள் பங்கேற்றார்கள்.

தமிழகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் சொந்தமாக தொழில் தொடங்க கடன் உதவி திட்டங்கள், பெண்களுக்கான வேலைவாய்ப்பு என பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் நிலையில், குடும்பத்தலைவிகளுக்கு ஒவ்வொரு மாதமும் உதவிடும் வகையில் மகளிர் உரிமை தொகை ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தமிழக அரசின் சார்பில் உலக மகளிர் உச்சி மாநாடு நடத்துகிறது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்சார்பில், தமிழ்நாட்டில் பெண்களுக்கு சமூக மற்றும் பொருளாதார அதிகாரமளித்தலை வலுப்படுத்தும் மற்றும் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்துதல் நோக்கில், இன்றும் , நாளையும் (ஜன. 27 ,28 )ல் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் உலக மகளிர் உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணி வாய்ப்புகளைப் பெறுவதற்கும், பணிகளில் நீடிப்பதற்கும், மீண்டும் பணிக்குத் திரும்புவதற்கும் உதவும் அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான தமிழ்நாட்டின் தொடர்ச்சியான முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த 'உலக மகளிர் உச்சி மாநாடு' நடைபெறுகிறது. மாநாட்டில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உலக வங்கியின் மண்டல இயக்குநர் செம் மெட்டே (செம் மெட்டே), ஐ.நா. பெண்கள் அமைப்பின் பிரதிநிதியான காந்தா சிங்,ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத் ன் இந்தியப் பிரதிநிதி ஏஞ்சலா லுசிகி, மொரிஷியஸின் தலைமைக் கொறடா நவீனா ரம்யாத், தொழில்துறை, கல்வித்துறை, பெருநிறுவன சமூகப் பொறுப்பு பங்காளர்கள், அடைகாப்பு மையங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட 500க்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் பங்கேற்கின்றனர். அந்த வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் , உலக மகளிர் உச்சி மாநாட்டை நேற்று(ஜன.27)சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் இன்று காலை தொடங்கி வைத்தார்

இரண்டு நாட்கள் நடைபெறும் உலக மகளிர் உச்சி மாநாட்டில் 11 கருப்பொருள்களில் அமர்வுகள் நடைபெற உள்ளன. மேலும், இதில் 70க்கும் மேற்பட்ட ஆளுமைகள் பேசுகிறார்கள். . இந்த விவாதங்கள்,

பெண்களின் வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக, உலக வங்கி உதவியுடன் தமிழக அரசு செயல்படுத்தும் 5 ஆண்டுகாலத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான அளவிலான திட்டத் தயாரிப்புகளை உருவாக்குவதற்கு உதவும்.

நாளை (ஜன.28,) அன்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் நிறைவு விழாவில், பெண்கள் திறன் மேம்பாடு மற்றும் முறையான வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு ஆதரவளிக்கும் மாநில அளவிலான பிரசாரமம் தொடங்கப்பட உள்ளது.

இந்த மாநாட்டில் உலக வங்கி பிரதிநிதிகள் , எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் அமைச்சர்கள், அதிகாரிகள், வெளிநாட்டு பிரதிநிதிகள் , பெண்கள் அமைப்பினர் கலந்து கொள்கிறார்கள்.



குன்றக்குடியில் இருந்து பழனிக்கு காவடி தூக்கிக்கொண்டு செல்லும் நகரத்தார்கள், திருப்பத்தூர் அருகே கண்டவரயான்பட்டி பகுதியில் உள்ள கண்மாய் கரை, வயல், காடு பகுதிகளை கடந்து செலும் போது கல்குத்தாமல் இருப்பதற்காக சுமார் 6 கிலோ மீட்டர் தூரம் வரை சிவப்பு, பச்சை மற்றும் ஊதா கம்பங்கள் விரித்து வரவேற்பு கொடுத்தனர்.



திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு மேல வைப்பாறை சேர்ந்த பக்தர்கள் சுமார் 100 பேர் சைக்கிள் மற்றும் பைக்கில் யாத்திரையாக வந்தனர்.

### சனிக்கிழமைகளில் விடுமுறை கோரி

## நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்!

### வங்கி சேவைகள் பாதிப்பு!!

புதுடெல்லி,ஜன.28–

வங்கிகளில் 2 மற்றும் 4 வது சனிக்கிழமைகள் விடுமுறையாக உள்ள நிலையில் அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை அளிக்க வங்கி ஊழியர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதன்படி, வாரத்தில் 5 நாள்கள் மட்டுமே வேலை என்ற முறையை நடைமுறைப்படுத்தக் கோரி தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக வங்கி ஊழியர்கள் சம்மேளனத்துடன் மத்திய அரசு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.இந்நிலையில் இன்று (செவ்வாய் கிழமை) திட்டமிட்டபடி நாடு முழுவதும் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்த போராட்டம் நடத்துகின்றனர்.

இதில், இந்தியா முழுவதும் உள்ள பொதுத்துறை, தனியார், வெளிநாட்டு, பிராந்திய கிராம மற்றும் கூட்டுறவு வங்கிகளை சேர்ந்த சுமார் 8 லட்சம் பேர் பங்கேற்றுள்ளனர். ஏற்கெனவே சனி, ஞாயிறு மற்றும் குடியரசு தினத்திற்கு விடுமுறைஅளிக்கப்பட்டநிலையில்,தற்போதுதொடர்ந்து நான்காவது நாளாக இன்று வங்கி ஊழியர்கள் போராட்டம் நடைபெற உள்ளதால், வங்கி சேவை பாதிக்கப்படும் சூழல் எழுந்துள்ளது. முன்னதாக இதுதொடர்பாக அகில இந்திய வங்கி அதிகாரிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.நாகராஜன் வெளியிட்டிருந்த செய்திக்குறிப்பில், “எல்.ஐ.சி. நிறுவனத்தில் 100 சதவீத அன்னிய நேரடி முதலீட்டை வழங்கிய மத்திய அரசின் முடிவை ஏற்க முடியாது. மேலும், வங்கி ஊழியர்களுக்கு வாரத்திற்கு 5 நாட்கள் மட்டுமே வேலை, வேலை நேரத்தை முறைப்படுத்துதல், ஓய்வூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட கோரிக்கைகளை நாங்கள் நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். எங்கள் கோரிக்கைகளை 6 மாத காலத்திற்குள் நிறைவேற்றுவதாக கடந்த 2024ம் ஆண்டு இந்திய வங்கிகள் சங்கம் (ஐ.பி.ஏ.) உறுதி அளித்தது. ஆனால், இதுவரை அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை. கடந்த மார்ச் மாதம் அறிவிக்கப்பட்ட போராட்டம், அரசின் உறுதிமொழியை ஏற்று ஒத்திவைக்கப்பட்டது.



சேலம் மாவட்டம், எடப்பாடி தாதாபுரம் ஸ்ரீகோட்டை மகா மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு நடைபெற்ற தீர்த்தக்குட ஊர்வலத்தில் பெண்கள் உள்பட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.



77 வது குடியரசு தினத்தை முன்னிட்டு சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில்சிங்காநல்லூர்சட்டமன்ற உறுப்பினர்கேஆர்ஜெயராம், தேசியக்கொடியை ஏற்றி வைத்தார் .

# நாமக்கல்லில் லாரி, சரக்கு வாகனம் மோதியதில் பைக்கில் சென்ற 3 பேர் பலி; 3 பேர் படுகாயம்!!

நாமக்கல்,ஜன.28–

நாமக்கல்லில் லாரி ,சரக்கு வாகனம், இருசக்கர வாகனம் மோதிய விபத்தில் பைக்கில் வந்த 2 பேர் உள்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 3 பேர் படுகாயமடைந்தனர்.

இது பற்றிய விவரம் வருமாறு:–

திருச்சியிலிருந்து, நாமக்கல் நோக்கி சமையல் எண்ணெய் லோடு ஏற்றிக்கொண்டு லாரி ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன்பின்னால் மினி சரக்கு வாகனம் ஒன்றும் வந்தது. நாமக்கல் – திருச்சி சாலை ரெயில்வே மேம்பாலத்தில் நேற்று அதிகாலையில் வந்தபோது முன்னால் சென்ற லாரி மீது சரக்கு வாகனம் எதிர்பாராத விதமாக மோதி விட்டு அவ்வழியாக வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியது.

இந்த விபத்தில் இருசக்கர வாகனத்தில் வந்த கணேஷபுரத்தை சேர்ந்த கார்த்திக்,ஜெய் நகரை சேர்ந்த சேனாதிபதி, சரக்கு வாகனத்தை ஓட்டிவந்த டிரைவர் ஆகிய 3 பேரும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.3 பேர் படுகாயமடைந்தனர்.

அப்பகுதியில் பெரும் போக்குவரத்து பாதித்தது. தகவலறிந்து சம்பவஇடத்திற்குவிரைந்து வந்த நாமக்கல் போலீசார் போக்குவரத்தை சீர் செய்துபடுகாயமடைந்த 3 பேரை மீட்டு நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்து குறித்து நாமக்கல் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



நாமக்கல்லில் லாரி, சரக்கு வாகனம், இருசக்கர வாகனம் மோதிய விபத்தில் பைக்கில் வந்த 2 பேர் உள்பட 3 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். 3 பேர் படுகாயமடைந்தனர்.



இந்திய திருநாட்டின் 77 வது குடியரசு தின விழாவை முன்னிட்டு, சேலம் மாவட்டம் காந்தி மைதானத்தில், குடியரசு தின சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட, மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்து, காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.





### 77 வது இந்திய குடியரசு தின விழா:

## திருப்பத்தூர் மாவட்ட மாற்றுத்திறனாளி நல சேவை சங்கத்தினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்!

வாணியம்பாடி ஜன. 28

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி புதூர் சாலையில் அமைந்து உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு, திருப்பத்தூர் மாவட்ட மாற்றுத் திறனாளி நல சேவை சங்க தலைவர் வழக்கறிஞர் மற்றும் சங்கத் தலைவர் ஸ்ரீகாந்த் தலைமையில் இந்திய குடியரசு தின விழா நடைபெற்றது.

இதில் துணைத் தலைவர் தென்னரசு, செயலாளர் வினோத் பிரபு மற்றும் மன்ற உறுப்பினர்கள் சுமார் ஒரு 60 பேர் பங்கேற்று மகாத்மா காந்தி சிலைக்கு மலர் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினர். மேலும் மூன்று சக்கர வண்டியில் ஊர்வலமாக, சந்தை வளாகத்திற்கு வந்து, பொதுமக்கள் உதவியு டனும் ஆட்டோ ஓட்டுநர்கள் உதவியுட னும் சங்கத்தலைவர் ஸ்ரீகாந்த் தேசியக் கொடியை ஏற்றி வைத்து வீரவணக்கம் செலுத்தினார். மன்ற உறுப்பினர் சசிகுமார் தலைமையில் உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப் பட்டது.

இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினர்.

### அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில்

## மொழிப்போருக்காக உயிர் நீத்த தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

சேலம், ஜன.28

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், சேலம் மாநகர் மாவட்ட கழகத்தின் சார்பில், மொழிப் போருக்காக உயிர் நீத்த தியாகிகளுக்கான வீரவணக்க நாள் பொதுக்கூட்டம். சேலம் பட்டை கோவில் ஸ்ரீ பிரசன்ன வரதராஜ பெருமாள் திருக்கோவில் அருகே 25126 ஞாயிற்றுகிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சேலம் மாநகர் மாவட்ட அதிமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான சிங்காரம், சேலம் மாநகர அதிமுக செயலாளர் ஏகேஎஸ்எம் பாலு ஆகியோரது தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட, அதிமுக மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் கோவை சத்தியன் கலந்து கொண்டு பேசும் போது, கடந்த நான்கரை வருடமாக முதலமைச்சராக பொறுப்பு வகித்த ஸ்டாலின் தமிழக மக்களுக்காக எந்த ஒரு பெரிய திட்டத்தையும் கொண்டு வரவில்லை, அதற்கு மாறாக தமிழகத்தில் எங்கு பார்த்தாலும் கஞ்சா மற்றும் போதைப்பொருட்களின்நடமாட்டத்தை தான் அவரது ஆட்சியில் அதிகப்படியாக கொண்டு வந்துள்ளார். தினமும் தங்க விலை நிலவரம் போல, கொலை நிலவரம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஸ்டாலின் தலைமையிலான இந்த திராவிட மாடல் என்னும் ஆட்சியில் பெண்களின் பாதுகாப்பு மிகவும் கேள்விக்குறி ஆகியுள்ளது. பொதுமக்களுக்கு பாதுகாப்பு தரவேண்டிய காவலர்களுக்கு தற்போது இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகி உள்ளது. எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது, தமிழகத்திற்கு பல்வேறு நலத்திட்டங்களை கொண்டு வருவதற்காக, மத்திய அரசோடு இணக்கமாக சென்று தமிழகத்தின் முன்னேற்றத்திற்கு அடித்தளம் வித்திட்டவர் தான் எடப்பாடி பழனிசாமி, மேலும் ஒரே ஆண்டில் 11 மருத்துவ கல்லூரிகள் கொண்டு வந்த சாதனையை இனிமேல் தமிழகத்தில் எந்த ஒரு அரசியல்வாதியாலும் செய்ய முடியாது, அதிமுக ஆட்சியில் பேணி காக்கப் பட்ட சட்டம் ஒழுங்கு தற்போது மிகவும் கீழ்த்தரமாக சென்று கொண்டுள்ளது. ஆளும் கட்சியை பற்றி விமர்சிக்கும் அதிமுக ஐடி வின் நிர்வாகிகளை அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக கைது செய்வது தான் ஸ்டாலின் அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து துறைகளிலும் ஊழலே இல்லாத துறை என்று எதையுமே கூற முடியாதஅளவிற்குஅனைத்துதுறைகளிலுமே மெகா மகா ஊழல் நடைபெற்று உள்ளது. தமிழகத்தில் உள்ள குடும்பங்கள் வாழ வேண்டும் என்று நினைக்காமல் தன் குடும்பம் மட்டும் வாழ வேண்டும் என்று நினைப்பவர் தான் முதலமைச்சர் ஸ்டாலின். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் 234 தொகுதிகளில் 210 தொகுதியை வென்று, வரலாற்று சாதனை படைத்து, தனிப்பெரும்பான்மையோடு முதலமைச்சராக எடப்பாடி பழனிச்சாமி பொறுப்பேற்கும் நாள் விரைவில் வர உள்ளது. இதற்காக கடந்த அதிமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் குறித்து கட்சியினர் பொதுமக்களிடம் எடுத்துரைக்க வேண்டும். அயராது பாடுபட்டு மீண்டும் அதிமுக ஆட்சியை கொண்டுவர கட்சியினர் உறுதி ஏற்க வேண்டும். தற்போது உள்ள சூழ்நிலையில் திமுக ஆட்சியை அகற்றி விட்டு அதிமுக ஆட்சியை ஆட்சி கட்டிலில் அமர வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்க தொடங்கிவிட்டனர். மேலும் எப்போது சட்டமன்றத் தேர்தல் வரும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் உள்ளதால், நிச்சயம் இந்த தேர்தலில் திமுகவிற்கு சமட்டி அடி அடிக்கப்பட்டு, அவர்களை ஆட்சிக் கட்டிலில் இருந்து தூக்கி எறியும் நாள் வெகு தொலைவில் இல்லை, மக்கள் நிச்சயம் திமுக ஆட்சியை அகற்ற உறுதுணையாக அதிமுகவிற்கு இருப்பார்கள். விரைவில் அதிமுக ஆட்சி கட்டிலில் அமரும் என்று கோவை சத்யன் பேசினார். இந்த நிகழ்ச்சியில் அதிமுக மாநகர பொறுப்பாளர்சிங்காரம், மாநகரசெயலாளர் ஏகேஎஸ்எம் பாலு, அம்மாபேட்டை பகுதி செயலாளரும், மாநகராட்சி எதிர்க் கட்சித் தலைவருமான யாதவ் மூர்த்தி, அதிமுக மாநகர் மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் முருகன், முன்னாள் எம்எல்ஏக்கள் செல்வராஜ், ரவிச்சந்திரன், முன்னாள் எம்பி பன்னீர் செல்வம், எம் எல் ஏ பாலசுப்பிரமணியம், உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் என ஏராளமானோர் இந்த மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில்

## மின்னணு பயிர் கணக்கிடும் பணிகளை வேளாண் அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்!

கிருஷ்ணகிரி, ஜன. 28

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மின்னணு பயிர் கணக்கிடும் பணிகளை வேளாண் அதிகாரிகள் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.

தமிழ்நாடு முழுவதும் வேளாண்மை துறையில் மூலம் மின்னணுவு பயிர்கணக்கிடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இப்பணியின் நோக்கம் துல்லியமான பயிர்களை தரவுகள் சேகரிப்பு அதன் மூலம் அரசு மானியம் திட்டங்களுக்கு தேவையான நீதி ஒதுக்கீடு பேரிடர் நிவாரணங்களுக்கு தேவையான பயிர் காப்பீட்டு இழப்புகளை விரைவாக வழங்குதல்,

தகுதியான விவசாயிகளுக்கு வங்கி கடன் பெறுவதை எளிமையாக்குதல் போன்ற பயனுள்ள நன்மைகளை விவசாயிகள் பெறும்

நோக்கில் ராபி மற்றும் கரிப் பருவத்திற்கு இந்த டிஜிட்டல் பயிர் கணக்கீடு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது ராபி பருவத்திற்கு மின்னணு பயிர் கணக்கிடும் பணி நடைபெற்று வருகிறது இந்த வகையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடந்து வரும் இப்பணிகளை

வேளாண்மை இயக்குனரகம் சென்னையிலிருந்துபணிபுரியும்வேளாண்மை துணை இயக்குனர் அறிவழகன் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வு பணியின் போது அதில் உள்ள இடர்பாடுகள் குறித்து அலுவலர்கள் மற்றும் தன்னார்வாளர்களிடம் கேட்டறிந்து நேரடியாக வயலில் களப்பணியை ஆய்வு செய்ததுடன் பணியில் ஈடுபட்டிருந்த பர்கூர் வட்டார தன்னார்வலரிடம் கேட்டறிந்தார்.



மேலும் இந்த ஆய்வின் போது வேளாண்மை இணைய இயக்குனர் காளிமுத்து , வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் தரக்கட்டுபாடு அலுவலர் சுரேஷ் குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

மேலும் இதுபோன்று மின்னணு பயிர் கணக்கீடு பணி மேற்கொள்ள விருப்பமுள்ள தன்னார்வலர்கள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு அப்பகுதி வேளாண்மை அலுவலர் ,உதவி வேளாண்மை அலுவலர் ஆகியோரே தொடர்பு கொண்டு பயனடைலாம் என்று

வேளாண்மை இயக்குனரகம் சென்னையிலிருந்துபணிபுரியும்வேளாண்மை துணை இயக்குனர் அறிவழகன் தெரிவித்தார்.



## கோவை மாநகராட்சிப் பள்ளிகளில் குடியரசு தின விழா!

கோவை, ஜன.28

இந்திய நாட்டின் 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு, கோவை மாநகராட்சி மத்திய மண்டலம், 80வது வார்டுக்குட்பட்ட செல்வபுரம் மாநகராட்சி ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் தேசியக் கொடியேற்று விழா மற்றும் பரிசளிப்பு விழா இன்று நடைபெற்றது.

இவ்விழாவில் கோவை மாநகராட்சி 80 வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பொது சுகாதாரக் குழுத் தலைவருமான பெ. மாரிசெல்வன் கலந்துகொண்டு தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

குடியரசு தினத்தை முன்னிட்டு பள்ளியில் நடத்தப்பட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவமாணவிகளுக்கு, பொது சுகாதாரக் குழு தலைவர் பெ.மாரிசெல்வன் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கிப் பாராட்டினார்.

இந்நிகழ்வில் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் தேவசகாயம், மற்றும் தனலட்சுமி, ஆசிரியர்கள், பகுதி பொறுப்பாளர் என்.ஜே.முருகேசன், வார்டு செயலாளர் நா. தங்கவேலன், ராஜேஷ் வை.இளங்கோ, கழக நிர்வாகிகள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



## கிருஷ்ணகிரியில் லஞ்ச ஊழல் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் பதவி ஏற்பு நிகழ்ச்சி!

கிருஷ்ணகிரி, ஜன.28

கிருஷ்ணகிரியில் ராயக்கோட்டை மேம்பாலம் அருகே உள்ள தனியார் அரங்கில் லஞ்ச ஊழல் ஒழிப்பு கமிட்டி சார்பில் புதிய தென்னிந்திய செயலாளர் ரத்தஷ் கார்த்திக் பதவியேற்பு நிகழ்ச்சி மற்றும் லஞ்சஊழல்தடுப்புகுறித்தவிழிப்புணர்வு

கூட்டமானது லஞ்ச ஊழல் ஒழிப்பு கமிட்டியின் தென்னிந்திய தலைவர் சையத் நதீமுல்லா ஹுசைனி தலைமையில்நடைப்பெற்றது.இந்தக்கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்ட தேசிய செயல் தலைவர் ஸ்ரீ அலோக் ரவீந்திர திவேதி கலந்துக் கொண்டு புதிய தென்னிந்திய செயலாளரை தேர்வு செய்து அறிமுகப்புடுத்தி,

சமூகத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் ஊழலை ஒழிக்க வேண்டிய அவசரத் தேவை குறித்து விளக்கஉரை ஆற்றினார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய தேசிய செயல் தலைவர் ஸ்ரீஅலோக் ரவீந்திர திவேதி

இந்தியா முழுவதும் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை வலுப்படுத்துவதற்கானக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஊழலுக்கு எதிராக வலுவான பொது இயக்கங்களை துவக்கி ஊழல் தொடர்பான பிரச்சினைகளுக்கு முற்று புள்ளி வைத்திடும் வகையில் கிராமங்கள் தோறும் மக்களிடையே விழிப்பு னர்வினை ஏற்படுத்த லஞ்ச ஊழல் ஒழிப்பு கமிட்டி செயல்பட்டு வருவதாக குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தில் தென் இந்திய செயல் தலைவர் சையத் நதீமுல்லா ஹுசைனி, தென்னிந்திய செயலாளர் ரத்தஷ்கார்த்திக், தென்னிந்திய துணைத் தலைவர் ரைசத்தீன், தமிழக தலைவர்

சையத் ருஹுல்லா, தமிழக செயல் தலைவர் டாக்டர்.சையத் ஷாகயாசுத்தீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.






காவேரிப்பட்டினம் ஒன்றியம் மிட்டஅள்ளி ஊராட்சியில் நடைப்பெற்ற கிராம சபை கூட்டத்தில் கலந்துக் கொண்ட கிழக்கு மாவட்ட காங்கிரஸ் முன்னால் தலைவரும் காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுக்குழு உறுப்பினருமான எல். சுப்பிரமணியன் கலந்து கொண்டு மகாத்மா காந்தியின் பெயரை மாற்றக்கூடாது, ஏழை, எளிய மக்கள் பயன்பொறும் வகையில் 150 நாள்களாக அதிகரித்து ஊதியத்தை உயர்த்தி வழங்க தீர்மானம் நிறைவேற்றக்கோரி ஊராட்சி செயலாளர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோரிடம் கோரிக்கை மனுவினைக் கொடுத்தார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி இந்து அறநிலைத்துறை பணியாற்றி வரும் போச்சம்பள்ளி ஆய்வாளர் ராமமூர்த்தி அவர்கள் சிறந்த பணிக்கான பாராட்டு சான்றிதழை மாவட்ட ஆட்சியர். தினேஷ் குமார் அவர்களிடம் பெற்றுக் கொண்டார் இந்த விழாவின் போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை உள்ளிட்ட அரசு அதிகாரிகள் இருந்தனர்.



## சங்ககிரி ஸ்ரீ ஓங்காளியம்மன் கோயில் குண்டம் திருவிழா!

### அக்னியில் இறங்கி பக்தர்கள் வழிபாடு!!

சங்ககிரி, ஜன. 28

சங்ககிரி பழைய எடப்பாடி ரோட்டில் ஸ்ரீஓங்காளியம்மன் மற்றும் ஸ்ரீபேச்சியம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் வருடம் தோறும் தை மாதத்தில் குண்டம் திருவிழா நடைபெற்று வருகிறது. கடந்த மூன்று வருடங்களாக கும்பாபிஷேக பணிகள் நடைபெற்று வந்ததால் திருவிழா நடைபெறவில்லை. தற்போது கும்பாபிஷேக விழா நடைபெற்ற நிலையில் மூன்று வருடங்களுக்குப் பிறகு கடந்த 17ஆம் தேதி இரவு குண்டம் திருவிழாபூச்சாட்டுதலுடன் துவங்கியது. விழாவையொட்டி 24 ஆம் தேதி அக்னி கரகம், அலகு குத்துதல், அம்மன் ஊர்வலம் நடைபெற்றது. 25ஆம் தேதி திருமஞ்சனம், சக்தி அழைத்தல் நடைபெற்றது. திருவிழாவின் முக்கிய நிகழ்வான தீமிதித்தல் என்னும் அக்னி குண்ட திருவிழா மற்றும் பொங்கல் வைத்தல் நடைபெற்றது. வி என் பாளையம் நல்ல கிணற்றில் பூஜை செய்து அங்கிருந்து ஊர்வலமாக புறப்பட்ட பக்தர்கள் சந்தைப்பேட்டை, சாவடி தெரு, கடைவீதி, பழைய எடப்பாடி ரோடு வழியாக கோவிலுக்கு வந்து அக்னி குண்டத்தில் இறங்கிச் சென்று நேர்த்திக்கடன் செலுத்தினார்கள். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். 31ஆம் தேதி அம்மன் ஊர்வலம் மற்றும்மஞ்சள்நீராடலுடன் விழா நிறைவு பெறுகிறது.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் மேயர் ஆர்.பிரியா அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அதிக சொத்துவரி செலுத்தியவர்கள்மற்றும்முறையாகசொத்துவரியினைஉரியகாலங்களில்தாமதமில்லாமல் செலுத்தியவர்களை கௌரவிக்கும் வகையில் சொத்து உரிமையாளர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், , இணை ஆணையாளர் (கல்வி) க. கற்பகம், , துணை ஆணையாளர்கள் ம.பிரதிவிராஜ்,மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டத்திற்கு பெரியசெவலை மின்துறை அலுவலகத்திற்கு உட்பட்ட புதிய நியாயவிலைக்கடையின் மிகவும் அருகே உள்ள மின்கம்பத்தை இடம் மாற்றம் செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கம் கோரிக்கை மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் இளைஞர்களின் கோரிக்கையாக உள்ளது.



சேலம் மாவட்டம் அஸ்தம்பட்டி அம்மா உணவகம் அருகே உள்ள, தமிழ்நாடு அரசு பட்டு வளர்ச்சி துறை அலுவலகத்தில், இந்திய திருநாட்டின் 77 வது குடியரசு தின விழா மிகவும் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பட்டு வளர்ச்சி துறை இயக்குனர் சாந்தி ஐஏஎஸ் அலுவலகத்தில் முறைப்படி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டுபண் பாடி தேசியக்கொடிக்கு மரியாதை செலுத்தினார்.

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி

# உறவினர்களுக்கு தபால் அட்டை அனுப்பிய கல்லூரி மாணவர்கள்!

கோவை,ஜன.28–

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு முதல் முறை வாக்காளர்கள் இடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி கோவை அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

இந் நி க ழ் ச் சி க் கு மாவட்டகலெக்டர்பவன் குமார் தலைமை தாங்கினார் இதில் தபால்துறை சார்பில் கல்லூரி வளாகத்தகில் தபால் பெட்டி வைக்கப்பட்டு இருந்தது, முதல் முறையாக வாக்காளர் பட்டியலில் இடம் பிடித்த இளம் தலைமுறை வாக்காளர்களான மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு தங்களுக்கு வழங்கப்பட்ட தபால் அட்டையில் 100 சதவீத வாக்குப்பதிவு, தேர்தலில் வாக்களிப்பதில் பெருமை கொள்கிறேன், என்பன போன்ற வாசகங்களை எழுதி தங்களது உறவினர்களுக்கு அ னு ப் ப அ ங் கி ருந் த தபால் பெட்டியில் போட்டனர். இதில்கல்லூரிமுதல்வர்எழிலி,கலெக்டரின்நேர்முகஉதவியாளர் ( தேர்தல் ) மகேஸ்வரி,தாசில்தார் தணிகைவேல்உள்ட பலர்கலந்து கொண்டனர். முன்னதாக கலெக்டர் பவன்குமார் தலைமையில்அனைவரும் உறுதிமொழிஎடுத்துக் கொண்டனர்.

# வெள்ளியங்கிரி ஆண்டவர் கோயிலில் 10,008 திருவிளக்கு பூஜை!



கோவை,ஜன.28–

கோவை வெள்ளியங்கிரி பூண்டி ஆண்டவர் கோயிலில் 10,008 தீப விளக்கு பூஜை பிரமாண்டமாக நடைபெற்றது. வருடந்தோரும் திருப்பூரை சார்ந்த எம்.எஸ்.பி. அறக்கட்டளையினர் மற்றும் வெள்ளியங்கிரி ஆண்டவர் பக்தர்கள் குழு இணைந்து இந்த ஆன்மீக நிகழ்வை நடத்துகின்றனர். 63வது வருடமாக இந்த அறக்கட்டளையை சார்ந்தவர்கள் உட்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு, இந்த நிகழ்வை நடத்தினர். காலையில் கணபதி ஓமம் செய்து வழிபாட்டை ஆரம்பித்தனர். அதனை தொடர்ந்துஉச்சிகாலபூஜை நடைபெற்றது. மாலை 4 மணியளவில் நவகிரக பூசை மற்றும் மலர் அலங்கார புஸ்பாஞ்சலி பூஜை நடைபெற்றது. மாலை 6 மணிக்கு 2,000க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்ற பிரமாண்டமான10,008தீப விளக்கு பூஜை நடைபெற்றது. இதில் சிவ லிங்கம், விநாயகர், அம்மன் உருவத்தில்அங்கரிக்கப்பட்டமலர் அலங்காரம் மற்றும் கோயில் நடையில் தீப விளக்குகள் ஏற்றி வழிபாடு பிராத்தனைநடைபெற்றது. உலக அமைதி, தொழில் வளர்ச்சி, குடும்ப நலன் வேண்டி பெண்கள் குடும்பம் குடும்பமாக வழிபட்டார்கள்.

இதனை தொடர்ந்து கயி ல ா ய வ ா த் தி ய த் தி ய இசைக்கு சிவ பக்தர்கள் ப க் தி ப ர வ ச த் தி ல் உற்சாக நடனமாடினர். இந்த பூசையானது வெள்ளியங்கிரி ஆண்டவர் சிவ பக்தர்களை பரவசத்தில் ஆழ்த்தியது.



77வது குடியரசு தின விழாவையொட்டி, தருமபுரி ஊராட்சி ஒன்றியம், கடகத்தூர் ஊராட்சியில்நடைபெற்றசிறப்புகிராமசபைகூட்டத்தில்தேசியதொழுநோய்உறுதிமொழி மாவட்ட ஆட்சித்தலைவர்ரெ.சதீஸ் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உடன் தருமபுரி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)விமல் ரவிக்குமார், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு.புவனேஷ்வரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்வெ.லோகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள்குமரேசன்,பொன்னரசன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஈரோட்டில் குடியரசு தினத்தை முன்னிட்டு

# 26 கி.மீ. தூரம் தேசியக்கொடி ஏந்தி ஐஃபிட் கிளப் உறுப்பினர்கள் சாதனை தொடர் ஓட்டம்!

ஈரோடு, ஜன.28

இந்தியா 1947ம் ஆண்டு சுதந்திரம் பெற்ற பிறகு, மக்களுக்கென தனி அரசியலமைப்புச்சட்டத்தை உருவாக்க நவம்பர் 1946இல் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது. டாக்டர் ராஜேந்திர பிரசாத் தலைவராகவும், டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் வரைவுக் குழுத் தலைவராகவும் இருந்து 2 ஆண்டுகள், 11 மாதங்கள், 18 நாட்கள் விவாதித்து உருவாக்கிய இந்த அரசியலமைப்புச் சட்டம் 26 ஜனவரி 1950இல் நடைமுறைக்கு வந்தது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளைப் போற்றும் வகையில், இந்தியாவின் 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு ஈரோட்டில் விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது.

பொதுமக்களிடையே உடல் வலிமை மற்றும் தேசப்பற்றை வலியுறுத்தும் நோக்கில், ஈரோடு iFit Club உறுப்பினர்கள் சுமார் 100 பேர் அதிகாலை 4.30 மணிக்குத் தங்கள் ஓட்டத்தைத் தொடங்கினர். கையில் மூவர்ண தேசியக் கொடியை ஏந்தியபடி 26 கி.மீ தூரம் இடைவிடாது தொடர் ஓட்டம் ஓடி குடியரசு தின வாழ்த்துகளைப் பரிமாறிக் கொண்டனர். இந்த எழுச்சிமிகு தொடர் ஓட்டத்திற்கான ஏற்பாடுகளை iFit Club நிர்வாகிகள் மிகச்சிறப்பாக முன்னின்று செய்திருந்தனர். தேசப்பற்றையும் ஆரோக்கியத்தையும் ஒருசேர வலியுறுத்திய இந்த நிகழ்வு பொதுமக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.



தருமபுரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 77வது குடியரசு தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், தேசிய கொடியினை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்கள். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.எஸ். மகேஸ்வரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஆர்.கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ரூபன் சங்கர் ராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஏற்காட்டில் பனிமூட்டம்; வாகன ஓட்டிகள் அவதி!



ஏற்காடு,ஜன.28

சேலம் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலமான ஏற்காட்டில் கடந்த இரண்டு மாதங்களாக பனிபொழிவு அதிகமாக காணப்படுகிறது. காரணமாக குளிரின் தாக்கம் அதிகமாக இருந்து வருகிறது.

குளிரின் தாக்கம் மற்றும் சாரல் மழை அதிகமாக இருப்பதால் ஏற்காடு வந்துள்ள சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் வாசிகள் குளித்தாங்கும் உடைகள் அணிந்து வெளியே சுற்றி வருகின்றனர்.

குறிப்பாக இன்று காலை ஏற்காட்டில் நிலவி வரும் அடர் பணிமூட்டம் மற்றும் சாரல் மழையால் ஏற்காடு வந்துள்ள சுற்றுலா பயணிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்த வண்ணம் உள்ளனர். தொடர் விடுமுறை தினம் என்பதால் அதிகாலையில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் ஏற்காடு வந்தவன்னம் உள்ளனர் இவர்கள் ஏற்காட்டில் நிலவி வரும் பனிமூட்டத்தின் மத்தியில் நடந்தும் புகைப்படம் எடுத்தும் மகிழ்ச்சியடைந்து வருகின்றனர். பனிமூட்டம் அடர்த்தியாக இருப்பதால் வாகன ஓட்டிகள் வாகனங்களை இயக்க முடியாமல்தவித்து வருகின்றனர். இரண்டு அடி தூரத்தில் உள்ளவர்கள் கூட தெரியாத அளவிற்கு பனிமூட்டம் நிலை வருவதால் வாகனங்கள் முகப்பு விளக்குகளை எரிய விட்டவாறு சாலையில் செல்ல வேண்டிய நிலை உள்ளது. மலைப்பாதையில் நிலவி வரும் பனிமூட்டத்தால் சுற்றுலா பயணிகள் வாகனங்களை இயக்க பெருமளவு சிரமம் அடைந்து வருகின்றனர்.

# பஞ்சலிங்க அருவியில் 3 லிங்கங்கள் பிரதிஷ்டை!

உடுமலை,ஜன.28–

உடுமலை அருகே உள்ள திருமூர்த்தி மலை அடிவாரத்தில் அமல் லிங்கேஸ்வரர் கோவில் உள்ளது மலையில் மஞ்சளை அறிவிக்கும் மேல் ஐந்து லிங்கங்கள் உள்ளன இதனால் இந்த அருவி பஞ்சலிங்க அறிவு என அழைக்கப்படுகிறது தினசரி ஏராளமான பக்தர்கள் வந்து வழிபட்டு அறிவியல் குறித்து செல்கின்றனர் இந்நிலையில் கடன் சில மாதங்களுக்கு முன் அறிவியல் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டபோது பஞ்சலிங்கங்களில் மூன்று லிங்கங்கள் அடித்துச் செல்லப்பட்டன,

இதை அடுத்து புதிதாக மூன்று லிங்கங்கள் அடித்துச் செல்லப்பட்டனர் இதை அடுத்து புதிதாக மூன்று லிங்கங்கள் பிரதிஷ்டை செய்யும் விழா நடந்தது. சிறப்பு பூஜைகள் செய்து லிங்கங்கள் நிறுவப்பட்டன. நிகழ்ச்சியில் கோயில் அறங்காவலர்குழுதலைவர்மொடக்குப்பட்டிரவிஉறுப்பினர்கள் ராதாகிருஷ்ணன். தேவராஜ் பானு ரேகா டாக்டர் ராஜபாலன். அறநிலையத் துறை உதவி ஆணையர் தர்ஷினி .ஆய்வாளர் சரவணன் செயல் அலுவலர் அமரநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நாமக்கல்லில் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம்!

## கலெக்டர் துர்காமூர்த்தி, பொதுமக்களுடன் பங்கேற்று ஓடினார்!!

நாமக்கல், ஜன.28

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு நாமக்கல்லில் தேசிய வாக்காளர் தின மராத்தான் ஓட்டம் நடைபெற்றன.

நாமக்கல் பூங்கா சாலை முன்பு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விமலா கொடி அசைத்து மராத்தான்ஓட்டத்தைதொடங்கி வைத்தார். முன்னதாக தேசிய வாக்காளர் உறுதி மொழியேற்றனர். இதனை தொடர்ந்து நடைபெற்ற பேரணியில் கலெக்டர் துர்காமூர்த்தி பங்கேற்றார். பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற மராத்தான் ஓட்டம் பூங்கா சாலை முன்பு தொடங்கி உழவர்சந்தை, கோட்டைசாலை, நேதாஜி சாலை வழியாக கடைவீதி, பழைய பேருந்து நிலையம் வழியாக மீண்டும் பூங்கா சாலையை வந்தடைந்தன. இப்பேரணியில் கல்லூரி மாணவர்கள் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் பங்கேற்றனர். மரத்தான் ஓட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டன.

# திருச்செங்கோட்டில் மாணவிக்கு நிதியுதவி!

திருச்செங்கோடு, ஜன.28

மல்லசமுத்திரம் அருகே உள்ள காளிப்பட்டி பகுதியை சேர்ந்த சிவரஞ்சனி என்ற மாணவி குடும்ப வறுமையின் காரணமாக மருத்துவ செலவு செய்ய முடியாமல் இருப்பதை அறிந்த நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் பாலாஜி அதனை மாநில இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலினிடம் தெரிவித்ததை அடுத்து திமுக இளைஞரணி அறக்கட்டளையிலிருந்து ரூ. 25,000 ஆயிரத்துக்க்கான காசோலையை பெற்று சிவரஞ்சனியிடம் வழங்கும் நிகழ்வானது நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் மேற்கு மாவட்ட இளைஞரணிஅமைப்பாளர் பாலாஜி தலைமையில் துணை அமைப்பாளர்கள் நவலடி ராஜா, பூக்கடை சுந்தர், கார்த்திகேயன், மற்றும் பரமத்தி ஒன்றிய செயலாளர் தனராசு,மல்லசமுத்திரம் பேரூர் செய லாளர் திருமலை ஆகியோர் முன்னிலையில் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கே.எஸ். மூர்த்தி அக்காசோலையினை மருத்துவச் செலவுக்காக பயனாளிக்கு வழங்கினார்.

# மதுரையைச் சேர்ந்த பிரபல ரவுடியை கொலை செய்ய முயற்சி!

சின்னசேலம் ஜன28

கஞ்சா வழக்கில் கைதாகி கடந்த 6 ஆண்டுகளாக சென்னை புழல் சிறையில் உள்ள மதுரையைச் சேர்ந்த பிரபல ரவுடியான வெள்ளைக்காளி மீது 9 கொலை வழக்கு, 8 கொலை முயற்சி வழக்கு, அடிதடி, மிரட்டல், கஞ்சா உள்பட 30க்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளது. இந்நிலையில் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்றிற்கு ஆஜர் படுத்த கடந்த 20ஆம் தேதி சென்னைபுழல்சிறைலிருந்து உதவி ஆய்வாளர் ஒருவர் தலைமையிலான ஐந்து பேர் கொண்ட துப்பாக்கி ஏந்திய எஸ்காடு போலீசார் வெள்ளைக்காளியை அழைத்து வந்து கடந்த 21ஆம் தேதி புதுக்கோட்டை நீதி மன்றத்திலும், அதனைத்தொடர்ந்து 22, 23 தேதிகளில் திண்டுக்கல் நீதிமன்றத்தில் வீடியோ கான்பரன்சிங் மூலம் வழக்கு விசாரணைக்கு ஆஜர்படுத்தி விட்டு, மீண்டும் சென்னை புழல் சிறையில் அடைப்பதற்கு 24ம் தேதி காவல்துறை வாகனத்தில் வெள்ளைக்காளியை எஸ்காடு போலீசார் அழைத்துச் சென்றனர். இந்நிலையில் மதிய உணவு சாப்பிடுவதற்கு பெரம்பலூர் அருகே திருச்சிசென்னை தேசிய நெடுஞ்சாலையில் திருமாந்துறை சுங்கச்சாவடி பகுதியில் 100 மீட்டர் தூரம் முன்னதாக உள்ள ஒரு ஹோட்டலில் வாகனத்தை நிறுத்தி விட்டு வெள்ளைக்காளியுடன் டேபிளால் அமர்ந்து போலீசார் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இதற்கிடையே வெள்ளிக்காளியை அழைத்து சென்ற காவல்துறை வாகனத்தை பின் தொடர்ந்து

வந்த சைலோ மற்றும் இனோவா கார்களில் வந்த 15 பேர் கொண்ட கும்பல் மிக, மிக அதிவேகமாக வந்து திடீரென காரை நிறுத்தி விட்டு கீழே இறங்கி ஹோட்டலுக்குள் நாட்டு வெடிகுண்டுகளை வீசி வெள்ளைக்காளியை வெட்டி கொலை செய்ய முயற்சித்துள்ளது. இந்நிலையில், இந்தக் கொலை முயற்சி சம்பவம் தொடர்பாக 10க்கும் மேற்பட்ட பிரிவுகளில் வழக்கு பதிவு செய்துள்ள மங்களமேடு போலீசார், ஐ.ஜி., உத்தரவின் பேரில் ஐந்து தனிப்படைகளை அமைத்து குற்றவாளிகளை தீவிரமாக தேடி வருகின்றனர். இந்நிலையில்



சின்ன சேலம் அருகே கீழ்குப்பம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வி. கிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள ஏரியில் கொலை முயற்சி கும்பல் பயன்படுத்திய கேரள பதிவெண்கொண்ட இனோவா கார் இருப்பதை கண்டறிந்த போலீசார் அதனை பறிமுதல் செய்து ஆராய்ந்த போது அந்தக் காரில் நாட்டு வெடிகுண்டுகள் மற்றும் பயங்கர ஆயுதங்கள் இருப்பதை கண்டறிந்தனர். பின்பு மோப்பநாய் மற்றும் வெடிகுண்டு நிபுணர்களை வரவழைத்து சோதனை செய்து பின்னர் வண்டியை பறிமுதல் செய்து காவல் நிலையம் எடுத்துச் சென்று தப்பியோடிய குற்றவா ளிகளை மிக தேடி வருகின்றனர்.

# அரசு தொடக்கப்பள்ளி மாணவர்களுடன் 77வது குடியரசுத் தின விழாவை கொண்டாடிய
# அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகம்!

கோவை,ஜன.28

77வது குடியரசுத் தின விழாவை அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் தேசிய கௌரவ தலைவர் மாண்புமிகு முன்னாள் நீதியரசர் கற்பகம் விநாயகம் அவர்களின் வழிகாட்டுதல் படி கோவை காட்டம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவ,மாணவிகளுடன் இவ்வமைப்பின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் ஆர்.கே.குமார் தலைமையில் தேசிய கொடியேற்றி கொண்டாடினார். அதன் விபரம் வருமாறு :

அகில இந்திய மக்கள் உரிமைகள் மற்றும் சட்ட விழிப்புணர்வு கழகத்தின் சார்பில் வருடா வருடம் சுதந்திர தினம் மற்றும் குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அது சமயம் இப்பள்ளி மாணவர்களுக்கு பள்ளி சீருடை,புத்தகப்பை மற்றும் இப்பள்ளிக்கு தேவையான அடிப்படை தேவைகளை கேட்டறிந்து செய்து கொடுத்து வருகின்றார்.

இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மூத்த வழக்கறிஞரும், இவ்வமைப்பின்மாவட்ட வழக்கறிஞர் பிரிவு மகளிரணி தலைவி தேன்மொழி கலந்து கொண்டு தேசிய கொடியேற்றி,சிறப்புரையாற்றினார் . இந்த விழாவில் இவ்வமைப்பின் அகில இந்திய பொதுச் செயலாளர் வி.எச். சுப்ரமணியம், துணைத்தலைவர், முன்னாள் வட்டார போக்குவரத்து அலுவலர்





நிறுவனத்தலைவர் முனைவர் ஆர்.கே.குமார்

கிருஷ்ணசாமி ஆகியோர் தலைமை வகிக்க, இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் சண்முக சுந்தரம், இவ்வமைப்பின் வழக்கறிஞர் பிரிவு மாவட்ட பிரிவு தலைவர் வழக்கறிஞர் சுந்தர பாலன், உதவியாசிரியர் செந்தில் குமார்,மாவட்ட செயலாளர்கள் விஜய்ராவ்,ஜான் அந்தோனி கிறிஸ்டோபர், ஐ.டி.விங் ஜெயப்பிரகாஷ் உள்ளிட்டோர். முன்னிலை வகித்தனர்.

மேலும் சிறப்பு அழைப்பாளர்களாக அன்னூர் வட்டார வளமைய மேற்பார்வையாளர் பாலமுருகன், முன்னாள் ஊராட்சி தலைவர் துரைசாமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் செல்வராஜ், முன்னாள் இராணுவ வீரர் மூர்த்தி, பாலகிருஷ்ணன், முன்னாள் வேளாண்மை தொடக்க கூட்டுறவு சங்க செயலர் கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு குடியரசுத் தின விழாவை பற்றி உரையாற்றினார்கள். சிறப்புரையாற்றிய வழக்கறிஞர் தேன் மொழி : இவ்விழாவில் விழா சிறப்புரையாற்றிய வழக்கறிஞர் தேன்மொழி அவர்கள் தமிழ் மொழியில் பெருமைகளை எடுத்துரைத்து பேச துவங்கினார். மாணவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் இந்திய அர





வழக்கறிஞர் தேன்மொழி

சின் குடியரசுத் தினம் எவ்வாறு உருவாக்கப்பட்டது, அதற்கு இந்திய சட்ட மேதை டாக்டர் சி.ஆர். அம்பேத்கர் அவர்களின் பங்களிப்பு எவ்வளவு என்பது ஏற்பட பல்வேறு சுவாரஸ்யமான சம்பவங்களை எடுத்துரைத்தார். மேலும் தேசிய கொடியின் வண்ணங்கள் மற்றும் அசோக் சக்கரம் வடிவமைத்ததன் விபரங்களை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எடுத்துரைத்தார். மாணவர்கள் நெப்போலியன் தனது படை வீரர்களுடன் இத்தாலியை மீட்க ஆல்ப்ஸ் மலையை கடக்கும் போது பல்வேறு விதமான வதந்திகள் கூறப்பட்ட தாகவும் ஆனால் அதை தனது மன உறுதியுடன் கடந்ததாகவும் அவ்வாறு மாணவர்கள் தாங்கள் இலக்கை அடைய மன உறுதியுடன் போராட வேண்டும் என கூறினார். மேலும் மாணவர்களுக்கு சுய ஒழுக்கம் மிகவும் இன்றியமையாதது என எடுத்துரைத்து தனது உரையை நிறைவு செய்தார்.

இதனை தொடர்ந்து இந்த நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் அகில இந்திய பொதுச்செயலாளர் வி.எச். சுப்ரமணியம் ஏற்பாட்டில் இனிப்புகள் அடங்கிய பெட்டகம் வழங்கப்பட்டது. இறுதியாக இப்பள்ளியின் தலைமை ஆசிரியர் சண்முக சுந்தரம் நன்றியுரையாற்றினார்.



# ஆம்பூரில் சட்டமன்ற அலுவலகத்தை அமைச்சர் எ.வ.வேலு திறந்து வைத்தார்!

ஆம்பூர் ஜன 28

திருப்பத்தூர்மாவட்டம் ஆம்பூர்கடந்த 2010 ஆம் ஆண்டு தொகுதி மறு சீரமைப்பிற்குபின்னர்ஆம்பூர்சட்டமன்றதொகுதி உருவானது.

அப்போது அதிமுக கூட்டணி சட்டமன்ற உறுப்பினர் பதவி வகித்து வந்த நிலையில், சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் இல்லாத நிலை இருந்து வந்தது.

இதனால் தொகுதியை சார்ந்த மக்களின் பிரச்னைகளை தீர்க்க சட்டமன்ற உறுப்பினரைஎளிதில்அணுகமுடியாமல்இருந்து வந்தது. பின்னர், திமுக சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.வில்வநாதன் ஆம்பூரில் சட்டமன்ற அலுவலகம் அமைத்துதர சட்டமன்றத்தில்கோரிக்கைவைத்துபேசினார்.

இதன் அடிப்படையில் அதற்கான இடம் குறித்து அரசு தரப்பில் ஆய்வு செய்து ஏ கஸ்பா பகுதியில் சட்டமன்ற அலுவலகம் அமைக்க நகராட்சி கூட்டத்தில் சட்டமன்ற அலுவலகம் கட்ட தீர்மானம் நிறைவேற்றபட்டது.

பின்னர் பொதுப்பணித்துறை பரிந்துரையின் பேரில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ரூ.85 லட்சம் ஒதுக்கீடு செய்து சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டிட பணிகளை துவங்க உத்தரவிட்டார். தற்போது கட்டிடபணிகள் முடிவடைந்து நேற்று புதிய சட்டமன்ற அலுவலக கட்டிடத்தை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிவசௌந்தரவல்லி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.சி.வில்வநாதன் (ஆம்பூர் ), க.தேவராஜி (ஜோலார்பேட்டை)நகர மன்ற தலைவர் ஏஜாஸ் அஹ்மத், துணைத் தலைவர் ஆறுமுகம், ஒன்றிய குழு தலைவர் சுரேஷ்குமார், ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், பாரி மற்றும் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.





கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் பெரிய மாரியம்மன் கோவில் திடலில் நாளைய தலைமுறை ஜமாப் கலைக்குழு சார்பில் ஒரு வருட காலமாக இக்கலையை அருகிலுள்ள பல்வேறு கிராமத்தில் உள்ள சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை ஜமாப் கலையை கற்றுக் கொடுத்து வந்தனர். இன்று இக்கலையை உலகம் போற்றும் விதமாக சிறப்பு விருந்தினர் முன்னாள் அமைச்சர் தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ எஸ் பி வேலுமணி முன்னிலையில்ஜமாப்அரங்கேற்றம்நிகழ்ச்சிநடைபெற்றது.நிகழ்ச்சியில்கலந்துகொண்ட அனைவருக்கும் சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர். அவர்கள் ஜமாப் கலைக்குழுவில்கற்றுவந்த 1000க்கும்மேற்பட்டோர்இந்நிகழ்ச்சியில்கலந்துகொண்டனர். மேலும்பாஜக நிர்வாகிகள் K வசந்தராஜன் மற்றும் சந்திரசேகரன் நாளைய தலைமுறை ஜமாப் கலைக்குழு அரங்கேற்ற விழாவில் 2000திற்கு மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கினர். கோவை திமுக வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ. ரவி வாழ்த்துரை வழங்கி பேசியதோடு விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் நினைவு பரிசுகளையும் வழங்கி சிறப்பித்தார்.



கோவை அன்னூர் அருகே உள்ள கணேசபுரம் எவரெஸ்ட் சிட்டி வீட்டு உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்போர் நல சங்கம் சார்பில் பொங்கல் மற்றும் குடியரசு தின விழா நகர் சங்க தலைவர்"சேவாரத்னா"அரிமாஆர்.எஸ்.இல்சுமிராஜாதலைமையில்நடந்தது.இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக கவுன்சிலர் அருணாசலம், பொறியாளர் நவீன்குமார், மாவட்ட துணை அமைப்பாளர் கோகுல் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஆறுமுகம், வெங்கடேசன், ராஜசேகர்,இளங்கோ,சந்தோஷ், மணிகண்டன் உள்பட ஏராளமான பொதுமக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி நகராட்சி அலுவலக வளாகத்தில் 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு நகராட்சி ஆணையாளர் ரகுராமன் தலைமை வகித்தார். நகரமன்ற துணைத்தலைவர் கே.கையாஸ் அஹ்மத், நகரமன்ற உறுப்பினர்கள் வி.எஸ்.சாரதிகுமார், ரஜினிகாந்த், பி.முஹம்மத் அனீஸ், ஷாயீன் பேகம் சலீம், பத்மாவதி, மஹபூபுண்ணிசா, குபேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி சுகாதார அலுவலர் அப்துல் ரஹீம் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக நகரமன்ற தலைவர் உமா சிவாஜி கணேசன் கலந்து கொண்டு தேசிய கொடி ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார். இதனை தொடர்ந்து நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கு சீருடை வழங்கினார். நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் நகராட்சி நிர்வாக அலுவலர் ஜெய்பிரகாஷ் நன்றி கூறினார்.



# குடியரசு தினத்தை முன்னிட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனையில் இரத்ததான முகாம்!

பாலக்கோடு,ஜன.28

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அரசு மருத்துவமனையில் 77வது குடியரசு தினத்தை முன்னிட்டு இரத்ததான முகாம் தலைமை மருத்துவர் பாலசுப்ரமணியம் தலைமையில் நடந்தது.

தர்மபுரி மாவட்ட சுகாதாரம் மற்றும் ஊரக நல பணிகள் இணை இயக்குநர் மருத்துவர் சாந்தி அவர்களின் அறிவுறுத்தல் படி 77வது குடியரசு தின விழாவை முன்னிட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனை, தருமபுரி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் இணைந்து நடத்திய ரத்தான முகாமில்சமூக சேவகர் சரவணன் உள்ளிட்ட 120 பேர் கலந்து கொண்டு ரத்த தானம் வழங்கினர். ரத்த தானம் வழங்கியவர்களுக்கு சத்தான பழரசமும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

இம்முகாமில் மருத்துவர் சசிரேகா செவிலியர்கள் கலைவாணி, ராணி, மருந்தாளுநர் முத்துசாமி, இந்திய வாலிபர் சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## குடியரசு நாள் விழாவில்
# சிறந்த எஸ்.ஐ.ஆர். பணிக்கான பாராட்டு சான்றிதழ்!
### போச்சம்பள்ளி வட்டாட்சியர் அருள் பெற்றார்!!



கிருஷ்ணகிரி, ஜன. 28

கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில் நடைபெற்ற குடியரசு நாள் தின விழாவில் கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் தினேஷ் குமார் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். அதன் பின்னர் காவல் துறையினர் மரியாதையையும் குடியரசு தினவிழா 2026 ஏற்றார். தொடர்ந்து பல்வேறு அரசு துறை சார்பில் 53பயனாளிகளுக்கு ரூபாய் 2.51 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதனை அடுத்து சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் சமாதான புறாக்களையும் ஆட்சியர் பறக்க விட்டார். அதன் பின்னர் பல்வேறு அரசு துறைகளில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு பாராட்டு சான்றிதழையும் அவர் வழங்கினார். அந்த வகையில் சிறந்த எஸ்.ஐ. ஆர். பணிக்கான பாராட்டு சான்றிதழ் போச்சம்பள்ளி வட்டாட்சியர் அருளுக்கு வழங்கப்பட்டது.

# கடலூர் மாவட்ட ஆட்சியர் தலைமை ஆசிரியருக்கு பாராட்டு!



கடலூர்,ஜன.28

கடலூர் மஞ்சகுப்பம் மைதானத்தில் நடைபெற்ற 77வது குடியரசு தின விழாவில்,சிறந்த கல்வி பணியாற்றிய பண்ருட்டி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சு.திருமாவளவன் , கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் IAS மாணவர்களின் நல்லொழுக்கத்தில் நல்ல முன்னேற்றம் கொண்டு வந்தமைக்காக நற்சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.

இவ்விழாவில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் , மாவட்ட வருவாய் அலு வலர் புண்ணியகோட்டி, கடலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் திரு.ரமேஷ் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகள் உடன் இருந்தனர்.சிறந்த கல்வி சேவைக்கான விருது பெற்ற தலைமை ஆசிரியர் .சு.திருமாவளவன் பள்ளி வளர்ச்சி குழு தலைவரும்,பண்ருட்டி நகர மன்ற தலைவருமான .க .ராஜேந்திரன் , பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் அ.ஜாகீர் உசேன், தேசிய மாணவர் படை அலுவலர் முனைவர் ராஜா ஆ , பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் துணைத் தலைவர் வீ. லோகநாதன் உள்ளிட்ட , பள்ளி ஆசிரியர்களும், பெற்றோர்களும் ,முன்னாள் மாணவர்களும், மாணவர்களும் முக்கிய பிரமுகர்களும் வாழ்த்து தெரிவித்தனர்.



தர்மபுரிமாவட்டம், பாலக்கோடு அக்ரஹாரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 77வதுகுடியரசு தின விழா கொண்டாட்டம் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் தண்டபாணி தலைமையில் நடந்தது நிகழ்ச்சிக்கு வார்டு கவுன்சிலர் விமலன், சமூக ஆர்வலர்கள் சிவா, வேலு தலைமை ஆசிரியர் அருள்நாதன், உதவி தலைமை ஆசிரியை உமா பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள்மாணவர்கள்மற்றும்சமுகஆர்வலர்கள்கலந்துகொண்டனர்.அனைவருக்கும் இனிப்புக்கள் வழங்கப்பட்டது.



காவேரிப்பட்டிணம் அருகே உள்ள மிட்ட அள்ளி நடு நிலைப்பள்ளியில் நடைப்பெற்ற குடியரசு தின விழாவில் முன்னால் ஊராட்சி மன்றத் தலைவர் எல். சுப்பிரமணியன் தேசியக்கொடியானை ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார். விழாவில், பள்ளியின் துணை ஆசிரியர்களான விஜயன் ரமேஷ் பாபு, குமார், கற்பகம், பாரதி திருமதி பிரியங்கா, ஊர் கவுண்டர் குப்புசாமி, மந்திரி கவுண்டர் மணிகண்டன், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் சாலம்மாள் முன்னால் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் விஞ்ஞானம், கராத்தே மாஸ்டர் மாரியப்பன், மற்றும் பள்ளி மேலாண்மை குழுத் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர்.